O.S. No.49/2021

24.09.2025

**பி.சா. 2**

**திரு பாண்டியன்**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

நான் அறிவழகனுக்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். பிரதிவாதியின் சகோதரியை நான் திருமணம் செய்துள்ளேன், பிரதிவாதிக்கு நான் நெருங்கிய உறவினர் என்றால் சரி. வாதி சீட்டு கம்பெனி நடத்தியதற்கான எழுத்து பூர்வமான ஆதாரம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வாதி சீட்டு கம்பெனி எதுவும் நடத்தவில்லை எனவும் பிரதிவாதி எனது மைத்துனர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் எனவும் சொன்னால் தவறு. பிரதிவாதி எந்த ஆண்டு வீடு கட்டினார் என்று எனக்கு ஞாபகமில்லை. பிரதிவாதி புதிதாக வயல் எதுவும் வாங்கியுள்ளாரா என்றால் இல்லை. பிரதிவாதி 2018 ல் வீடு கட்ட ஆரம்பித்தார் எனவும் அவர் புதிதாக வயல்கள் வாங்கியுள்ளார் எனவும் அந்த உண்மைகள் தெரிந்தும் நான்

ஞாபகமில்லை என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. 25.08.2021ல் வடுவூர் காவல் நிலையத்தில் வாதி பிரதிவாதி மீது புகார் கொடுத்துள்ளார் என்றால் சரி. ஆவணங்களை பிரதிவாதி வாதியிடம் திரும்ப கேட்டபோது தகராறு ஏற்பட்டது. அந்த புகாரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது கடன் கொடுத்ததற்காக புகார் கொடுத்தார். வாதி, பிரதிவாதி மீது காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை எனவும் அந்த புகார் பின்னிட்டு வழக்கிற்காக தயார் செய்யப்பட்டவை எனவும் சொன்னால் தவறு. வாதி, பிரதிவாதிக்கு கடன் கொடுத்தது உண்மை எனவும் அதற்காக பிரதிவாதி, வாதிக்கு வா.சா.ஆ.1 எழுதி கொடுத்தது உண்மை எனவும் பிரதிவாதி என் மைத்துனர் என்பதால் இதை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.09.24 14:43:00 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

திருவாரூர்.

## O.S. No.49/2021

**24.09.2025**

**பி.சா. 3**

**திரு குணசேகரன்**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

பிரதிவாதி என்னுடைய சித்தப்பா மகன் என்றால் சரி. வாதி கிராமத்தில் ஏல சீட்டு நடத்தி வந்ததற்கான எழுத்து பூர்வமான ஆதாரம் எதையும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வாதிக்கும் பிரதிவாதிக்குமிடையே ஏற்பட்ட பண பரிமாற்றங்கள் பற்றி எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது, கேள்விபட்டு தெரியும். வாதி, பிரதிவாதி மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்து 29.06.2021 அன்று காவல் நிலையத்தில் எழுதிக் கொடுத்த விளக்க கடிதத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை, அதில் உள்ள விபரம் எனக்கு தெரியாது. வாதியிடம் நான் ஏல சீட்டு எடுத்ததற்கான எழுத்து பூர்வமான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 2018 ம் ஆண்டு பிரதிவாதி நடத்துனராக பணியாற்றியபோது வீடு கட்டிய விபரம் எனக்கு தெரியுமா

என்றால் தெரியும். வாதி, பிரதிவாதிக்கு 2018 ல் கடன் கொடுத்தது உண்மை எனவும் பிரதிவாதி கடனை திரும்ப கொடுக்காததால் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் எனவும் நடந்த உண்மைகள் எனக்கு தெரிந்தும் பிரதிவாதி என் சித்தப்பா மகன் என்பதால் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் வழக்கிற்காக பின்னிட்டு பொய்யாக தயார் செய்யப்பட்டவை என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.09.24 14:43:07 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

திருவாரூர்.